வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை– 5.

**கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிருவாக ஆணையரின் செயல்முறைகள்**
**முன்னிலை:திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,**

செ.மு.ஆ.எண். ஆகு3/1009/2021. நாள்.01.11.2021.

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் – மயிலாடுதுறை (முன்னாள் நாகப்பட்டினம்) மாவட்ட வருவாய் அலகில் – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.நா.பிரவீன்குமார் மற்றும் 2 நபர்களின் பணியினை பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் கடித எண்.ந.க.அ3/11824/2020, நாள்.22.12.2020.
2. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் கடித எண்.ந.க.அ3/10248/2020, நாள்.22.12.2020.
3. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் கடித எண்.ந.க.அ3/19914/2020, நாள்.18.12.2020.
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
5. அரசுக் கடித எண்.9694/பணி9(2)/2021–3, நாள்.28.06.2021.

*******

**ஆணை:**

பார்வையில் காணும் மயிலாடுதுறை (முன்னாள் நாகப்பட்டினம்) மாவட்ட வருவாய் அலகில், இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.நா.பிரவீன்குமார் மற்றும் 2 நபர்களின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்வது தொடர்பாக, மாவட்ட ஆட்சியரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றுள்ளது.

2) இந்நேர்வில், பார்வை–5இல் காணும் அரசாணை மற்றும் பார்வை–6இல் காணும் அரசுக் கடிதத்தில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட பணிநியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மயிலாடுதுறை (முன்னாள் நாகப்பட்டினம்) மாவட்ட வருவாய் அலகில், காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் பின்வரும் 3 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றனர்.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.நா.பிரவீன்குமார் த/பெ.ஜெ.நாகராஜன் (இளநிலை வருவாய் ஆய்வாளர்) | 10.06.2019 முற்பகல் | 10.06.2019 முற்பகல் |
| 2. | திரு.ஆர்.வினோத் த/பெ.ராமமூர்த்தி (இளநிலை வருவாய் ஆய்வாளர்) | 01.07.2019 முற்பகல் | 01.07.2019 முற்பகல் |
| 3. | திரு.கோ.செந்தில்குமார் த/பெ.கோவிந்தராஜன் (இளநிலை வருவாய் ஆய்வாளர்) | 21.08.2019 முற்பகல் | 21.08.2019 முற்பகல் |

4) எனவே, மேற்படி அரசாணை மற்றும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கிணங்க, மேற்கண்ட நபர்களின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேலும், தனியர்களது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/– க.பணீந்திரரெட்டி,
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாகஆணையர்.

<u>பெறுநர்:</u>
சம்பந்தபட்ட நபர்கள்,
மயிலாடுதுறை மாவட்டம்.
**(மாவட்ட ஆட்சியர் மூலமாக)**

<u>நகல்:</u>

1. மாவட்ட ஆட்சியர்
   மயிலாடுதுறை மாவட்டம். (தக்க பதிவுகள் மேற்கொள்ள)
2. இருப்புக் கோப்பு.
3. அரசு முதன்மைச் செயலர்,
   வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி–9) துறை,
   தலைமைச் செயலகம், சென்னை– 9.

உதவி ஆணையர் – 4,
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையருக்காக.